Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (28.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 02

# தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க புலிகள் முடிவு

## மாவீரர் தின உரையில் தலைவர் பிரபா தீர்க்கம்
## சர்வதேசம் உட்பட சகல தரப்பு ஆதரவையும் கோருகிறார்



கிளிநொச்சி, நவம்பர் 28

"தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு சிங்களத் தலைவர்கள் நீதியான தீர்வினை ஒருபோதும் முன்வைக்கப்போவதில்லை என்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது. எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் சிங்கள தேசத்தில் மனமாற்றம் நிகழப் போவதில்லை என்பதும், தமிழர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதும் தெட்டத் தெளிவாகியிருக்கின்றது. எனவே, நடக்கமுடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் பழைய பாதையில் நடைபோட இனியும் நாம் தயாரில்லை. எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளவும் விரும்பவில்லை. சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, இந்த விடுதலைப் பாதையில் சென்று சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கின்றோம்.

எமது அரசியல் சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலக நாடுகளையும், சர்வதேச சமூகத்தையும் வேண்டுகிறோம்.'' - இவ்வாறு அறிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். நேற்றைய தமது மாவீரர் நாள் உரையிலேயே இந்தப் பிரகடனத்தை அவர் விடுத்தார். நேற்று மாலை அவரது முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் தின உரை வெளியானது. (உரையின் விவரம் 2ஆம், 5ஆம் பக்கங்களில்)

## புலிகள் வன்முறையை கைவிடும்வரை ஏ-9 வீதியைத் திறக்கப்போவதில்லை!

### ஜனாதிபதி மஹிந்த இந்தியாவில் தெரிவிப்பு

தெஹ்ராடன், நவம்பர் 28

இலங்கையில் தமிழ் மக்கள் வசிக்கும் யாழ்ப்பாணத்தைப் பிற பகுதிகளுடன் இணைக்கும் 'ஏ-9' நெடுஞ்சாலையைத் திறக்க அந்நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிட வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையை இலங்கை அரசு மூடிவிட்டதால் லட்சக் கணக்கான தமிழ்மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு கடல் மற்றும் வான்வழியாக பொருள்கள் அனுப்பப்படுகின்றன என்று இலங்கை அரசு தெரிவித்து வருகிறது. ஆனால், தமிழ் மக்களின் துயரம் தீர்ந்தபாடில்லை.

இந்த நிலையில், ஐந்து நாள் பயண மாக இலங்கை அதிபர் ராஜபக்ஷ இந்தியா வந்துள்ளார். உத்தராஞ்சல் மாநில தலைநகர் தெஹ்ராடனில் நேற்றுமுன்தினம் ஆசிய மேயர்கள் மாநாட்டை அவர் தொடக்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் ராஜபக்ஷ பேசினார். அப்போது யாழ்ப்பாண நெடுஞ்சாலைப் பிரச்சினை, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு அதிபர் ராஜபக்ஷ பதிலளித்து கூறியதாவது:-



"அமைதிப் பேச்சுக்கு நான் எதிரானவன் அல்லன். ஆனால், அதற்கான முயற்சிகள் எடுக்கும்போது அதை முறியடிப்பது விடுதலைப் புலிகள் தான். விடுதலைப் புலிகளின் வன்முறை செயல்கள் நிறுத்தப்படும்வரை யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை திறக்கும் பேச்சுக்கே இடமில்லை. இலங்கைப் (06ஆம் பக்கம் பார்க்க)

## மின் விநியோக நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

குடாநாட்டில் மின் விநியோகம் இன்று முதல் அதிகாலை 3 மணி முதல் வழங்கப் படவிருக்கின்றது.

ஜி.சீ.ஈ. (சாதாரண) தர மாணவர்கள் பரீட்சைக்கு தயார் செய்ய உதவும் வகையில் அதிகாலை 3 மணி தொடக்கம் காலை 7 மணிவரையும் மின் விநியோகம் வழங்கப்படும் என சிவில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்போது காலையில் 5 மணிதொடக்கம் 7 மணிவரையுமே மின்சார விநியோகம் இடம்பெறுகிறது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ளது போன்று வழமைபோல் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரையும் -

பின்னர் மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணிவரையும் - மின்விநியோகம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

## புலிகளின் ஏமாற்றும் நிலைப்பாடு பிரபாவின் உரையில் தெரிகிறது!

### அதுகுறித்து அரசு அக்கறைப்படாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ.28

விடுதலைப் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரையில் புலிகளது ஏமாற்றும் நிலைப்பாடு தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. இதுபோன்ற எத்தனையோ கருத்துகளை கடந்த காலங்களில் அரசு பலமுறை கேட்டுவிட்டது. எனவே, இதில் அக்கறைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்ததாவது:-

இது போன்ற கருத்துக்களை கடந்த காலங்களில் பல்முறை கேட்டுவிட்டோம். கடந்த ஆண்டு நிகழ்த்திய உரையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தான் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்திருக்கிறார் என விடுதலைப் புலிகளின் தலைவர் இப்போது கூறுகின்றார்.

இதில் உண்மை என்னவென்றால் கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் தனது மாவீரர்நாள் உரையில், மஹிந்த ராஜபக்ஷவை ஒரு ஜதார்த்தமான அரசியல் தலைவர் என்று அறிமுகப்படுத்தி, அவருக்கு இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தான் ஓர் ஆண்டுகால அவகாசம் கொடுக்கிறார் எனக் கூறினார்.

கடந்த ஆண்டு மாவீரர்தின உரையை ஆற்றிய 2 வாரங்களுக்குப் பின்னர், அவர் வன்முறையை அதிகரிக்க ஆரம்பித்தார். இது அவரின் ஏமாற்றும் தன்மை மற்றும் பயங்கரவாதத் தன்மையின் ஒரு தெளிவான அடையாளம்.

அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவே முனைகின்றது. இதற்காகத்தான் அனைத்துக் கட்சி மாநாடு, அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் மாநாடு மற்றும் வல்லுநர்கள் குழு என்று அரசு உருவாக்கியிருக்கின்றது.

தமிழ்க்கட்சிகளின் தலைவர்களின் பங்களிப்புடன் அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு முடிவை (06ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு நேற்று சோபையிழந்தது

யாழ்ப்பாணம், நவ.28

மாவீரர் தினமான நேற்று யாழ். குடாநாடு சோபையிழந்து காணப்பட்டது.

முக்கிய நகரப் பகுதிகளில் கடைகள் மூடப்பட்டிருந்தன. சந்தைகளும் இயங்கவில்லை. பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகக் காணப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் (06ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக வளாகப் பகுதியில் நேற்றுச் சோதனை

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாசலில் நேற்றுக் காலை படையினரின் சோதனைகள் இடம்பெற்றன

பல்கலைக்கழக ஊழியர்கள் முற்பகல் 10.30 மணியளவில் வளாகத்தில் இருந்து வெளியே வந்தபோது பல்கலைக்கழகம் முன்பாக உள்ள வீதியில் நின்ற இராணுவத்தினரும், பொலிஸாரும் ஊழியர்கள், விரிவுரையாளர்கள் அனைவரையும் சோதனைக்கு உட்படுத்தினர். (ஜ-68)

## திருமலை பாலையூற்றில் மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொலை!

கிண்ணியா, நவ. 28

திருகோணமலை, பாலையூற்று குருஸ் சந்தியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இளைஞர்கள் மூவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர்களுள் இருவர் சீனக்குடா சிமெந்து தொழிற்சாலையின் ஊழியர்களாகக் கடமையாற்றி வந்த பாலையூற்றைச் சேர்ந்த அலோசியஸ் நிரோஷன் (வயது-26) என்றும், மற்றையவர் அதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது-27) எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் வழமைபோலவே சீனக்குடா சிமெந்துத் தொழிற்சாலைக்குச் (06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எப்போதும் அமைதி முறைத் தீர்வையே விரும்பினோம்; ஐரோப்பிய ஒன்றிய முடிவினால் அரசு கடும்போக்கை நாடியது

மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரை வருமாறு:

எமது விடுதலை வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்புமுனையில் நாம் தற்போது நிற்கின்றோம். எமது போராட்டப் பாதை மிகவும் நீண்டது, கடினமானது, பல கஷ்டமான கட்டங்களைக் கொண்டது. இதுவரை எந்தவொரு விடுதலைப் போராட்டமும் சந்தித்திருக்காத சவால்களை, எதிர்பாராத திருப்பங்களை நாங்கள் எதிர்கொண்டிருக்கின்றோம். வரலாற்றில் முன்னொருபோதுமே நடந்திருக்காதவாறு நாங்கள் போரையும் அமைதிப் பேச்சுக்களையும் ஒரே நேரத்தில் சந்தித்து வருகின்றோம்.

அமைதிப் பேச்சுக்கள் மூலமாக இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணுவதற்காக எம்மை நாமே அர்ப்பணித்ததிலிருந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த நீண்ட காலத்திற்குள், எரிந்துகொண்டிருக்கும் தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட்டதா? தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான கொடூரத்தினைத் திணித்துவரும் சிங்களத் தலைமைகளின் மனநிலையில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏதேனும் ஏற்பட்டதா? தமிழர்களது நீதியான கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டனவா? அடக்குமுறை இராணுவத்தின் கைகளில் சிக்குண்டு அவர்கள் நாளாந்தம் அனுபவித்துவரும் துன்ப, துயரங்களிலிருந்து எமது மக்கள் விடிவினைக் காண முடிந்ததா? எம்மக்களது நாளாந்த பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டனவா? இவற்றில் எதுவுமே நடைபெறவில்லை. மாறாக, நீதியினைப் பெறுவோம் என்று நம்பிக்கைக் கனவு கண்ட தமிழர்களுக்கு சாவும் அழிவுமே பரிசுப்பொருட்களாக வழங்கப்பட்டன.

அமைதி போதித்த நாடுகள் தங்களது மௌனத்திற்குள் தம் மனச்சாட்சியினைப் புதைத்திருக்கும் வேளையில், தமிழர் தாயகத்தின் மீது பாரிய அவலம் ஒன்று அரங்கேற்றப்பட்டு வருகின்றது. பிரதான பாதைகளை மூடி தமிழ் மக்களை அவர்களது சொந்த நிலத்திலேயே சிறையிட்டு வைத்திருக்கின்றது சிங்கள அரசு. அம்மக்களது நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்தி, இதன் மூலம் அவர்களது சமூக வாழ்வினைக் கட்டுப்படுத்தி அவர்களது சுதந்திரத்தினை இல்லாமற்செய்து அவர்களை அதற்குள் கொடுமைப்படுத்தி வருகின்றது. சிங்கள அரசாங்கம் தமிழர் தாயகத்தினைத் துண்டாடி, இராணுவ முகாம்களை அமைத்து, முட்கம்பிகள் மூலம் விலங்கிட்டு; சோதனைச் சாவடிகளால் நிறைத்து, அதனையொரு மாபெரும் மனித வதைமுகாமாக மாற்றியிருக்கின்றது.

## இராணுவ, பொருளாதார முனைகளில் போர் திணிக்கப்பட்டிருக்கின்றது

சிங்கள அரசாங்கம் இராணுவ மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டு முனைகளிலும் எம்மக்கள்மீது போரினைத் திணித்திருக்கின்றது. முன்னொருபோதுமே நிகழ்ந்திராத வகையில் எங்களது மக்கள் அவர்களது அடிப்படை உரிமைகள் மீதான தாக்குதல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள்: எண்ணுக்கணக்கற்ற கைதுகள், சிறைவைப்புக்கள், அடித்துத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குதல், பாலியல் வல்லுறவுகள் மற்றும் பாலியல் கொடுமைகள், படுகொலைகள், காணாமற்போதல்கள், எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் மற்றும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் என்பன தங்குதடையின்றி நடந்துகொண்டிருக்கின்றன. மறுமுனையில் எமது மக்கள் பொருளாதாரத் தடை, உணவு, மருத்துவம், போக்குவரத்து மற்றும் மீன்பிடி உள்ளிட்ட அனைத்து வகையான அத்தியாவசியப் பொருள்களுக்குமான தடை ஆகியவற்றுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

யுத்தநிறுத்தம், அமைதிப் பேச்சுக்கள், மற்றும் பொறுமையுடன் அமைதி காத்த ஐந்து ஆண்டுகள் ஆகியவற்றிற்குப் பின்னரும் சமாதானத்தின் பலன்கள் எமது மக்களுக்குக் கிட்டவில்லை. தாங்கமுடியாத சுமைகளை எம் மக்கள் அவர்களது நாளாந்த வாழ்வில் எதிர்கொள்கின்றார்கள். பல்லாபிரக்கணக்கான மக்கள் அவர்களது வீடுகளிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு, பிணிகளுடனும், பசியுடனும் அகதி முகாம்களில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எங்களது மக்களுக்கு உணவையும் மருந்தையும் மறுத்து, அவர்களைப் பட்டினிச் சாவு நிலைக்குகள் கொண்டுசெல்லும் சிங்கள அரசாங்கம் எமது மக்களுக்கு இரக்கத்தினைக் காட்டி அவர்களது அரசியல் உரிமைகள் வழங்கும் என்று யாரும் எதிர்பார்க்கமுடியாது. அப்படி எதிர்பார்ப்பது முட்டாள்தனமேயன்றி, வேறொன்றுமல்ல.

அறிவியலில் ஏற்பட்டுவரும் அதீத வளர்ச்சியும், அதனால் ஏற்பட்ட உலகப் பார்வையும் புதிய யுகத்திற்குள் மனித இனத்தினைக் கொண்டு செல்கின்றது. அறிவியலில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஏற்ப சிந்தனையும், கருத்துக்களும், சித்தாந்தங்களும் மாற்றங்களுக்கு உள்ளாகி, சமூகப் புறநிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆயினும், சிங்கள தேசத்திலோ அதன் சிந்தனைகள், சித்தாந்தங்களிலும் சரி, அல்லது அதன் சமூக உலகிலும் சரி எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. சிங்கள தேசம் புதிய காற்றைச் சுவாசித்து, புதிதாகச் சிந்திப்பதற்கு மறுத்துக்கொண்டிருக்கின்றது.

சிங்கள தேசம் அதன் பண்டைய இதிகாசமான மகாவம்சக் கருத்துக்களின் தவறான பிரயோகங்களால் தொடர்ந்தும் வழி தவறிச்சென்று, அதனால் உருவாக்கப்பட்ட பேரினவாத கருத்துக்களுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது. இந்தப் பொறிக்குள் இருந்த தன்னை விடுவித்துக்கொள்ள முடியாமல், சிங்கள பௌத்த பேரினவாதப் போதனைகளை அதன் பிரதான தேசிய சித்தாந்தமாகப் பின்பற்றி வருகின்றது. இந்தப் போதனைகள் அதன் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், இன்னும் ஏன் அதன் ஊடகங்களிலும் கூடப் பரவியிருக்கின்றது. சிங்கள பௌத்த பேரினவாதப் போதனைகளின் இந்த ஆதிக்கம் அதன் மாணவர்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் என்போரை அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக சிந்திக்க விடாமல் செய்திருக்கின்றது. துரதிஸ்டவசமாக தமிழர்களின் தேசியப் பிரச்சினையினை நாகரீகமான முறையில் தீர்ப்பதற்கு சிங்களத் தலைவர்கள் உண்மையான முயற்சிகள் எடுப்பதை இது தடுத்துவருகின்றது.

## நாம் எப்போதும் அமைதி முறையினையே விரும்பினோம்

எமது விடுதலை அமைப்பும் சரி, எமது மக்களும் சரி ஒருபோதுமே போரை விரும்பியதில்லை. எமது மக்களது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் அமைதிவழி அணுகுமுறையினையே எப்போதும் விரும்பினோம். அமைதி வழியில் எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் எப்போதும் தயங்கியதில்லை. இதனால்தான் திம்புவில் ஆரம்பித்து ஜெனீவா வரை பல்வேறு தடவைகள், பல்வேறு நேரங்களில், பல்வேறு நாடுகளில் பேச்சுக்களை நடத்தியிருக்கிறோம். நோர்வேயின் அனுசரணையோடும், சர்வதேச சமூகத்தின் ஆசீர்வாதத்தோடும் பல்வேறு நாட்டுத் தலைநகரங்களில் நடைபெற்று வரும் தற்போதைய அமைதி முயற்சிகள் முற்றிலும் வித்தியாசமானவை.

ஒக்ரோபர் 31, 2000 இல் அப்போதைய நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னிக்கு விஜயம் செய்து, எங்களைச் சந்தித்ததுடன் இந்த அமைதிப் பயணம் ஆரம்பமாகியது. முற்றிலும் வித்தியாசமான காலகட்டத்தில், வித்தியாசமான வரலாற்றுச் சூழலில், வித்தியாசமான வடிவத்தில் வித்தியாசமான பாதையில் இந்த அமைதிப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சமாதானத்தை நோக்கிய முயற்சிகள், சிங்கள அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புப்போர் என இரண்டு முனைகளில் இது நகர்ந்துகொண்டிருக்கின்றது.

நாங்கள் அமைதி காத்த ஆறு ஆண்டுகளில், எங்களது முயற்சிகளில் நாங்கள் நேர்மையாகச் செயற்பட்டோம். உண்மையில், அமைதி முயற்சிகளை நாங்களே ஆரம்பித்தோம். ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தினைப் பிரகடனப்படுத்தி அமைதி முயற்சிகளுக்கான வலுவான அடித்தளத்தினை நாங்கள் அமைத்தோம். அமைதிப் பேச்சுக்களுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையோ காலக்கெடுக்களையோ விதிக்கவில்லை. இந்த முயற்சிகளை பலவீனமான நிலையிலிருந்து கொண்டு நாங்கள் மேற்கொள்ளவில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பினையும், இயக்கச்சி-ஆனையிறவு இராணுவக் கூட்டுப்படைத் தளத்தினையும் நாங்கள் மீளக் கைப்பற்றினோம். சிங்கள இராணுவத்தின் அக்கினிச் சுவாலை படை நடவடிக்கையினை நாங்கள் தோற்கடித்தோம். எங்களது போராட்ட வரலாற்றில் பாரிய இராணுவ சாதனைகளை நாங்கள் ஈட்டினோம். இந்தப் பலமான நிலையில் இருந்துகொண்டுதான் நாங்கள் இந்தச் சமாதான முயற்சிகளை மேற்கொண்டோம்.

தென்னிலங்கையின் நிலைமையோ முற்றிலும் மாறானதாக இருந்தது. அடுத்தடுத்துத் தோல்விகளை எதிர்கொண்ட தென்னிலங்கை போரை எதிர்கொள்வதற்கான மனோதிடத்தினை இழந்துகொண்டிருந்தது. இராணுவத்தின் முதுகெலும்பு முறிந்திருந்தது. நாட்டின் பொருளாதாரம் மிகவும் பலவீனமானதாக இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில்தான் சிங்கள தேசம் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டது. அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு வந்த இந்த ஐந்து ஆண்டுகளில், விக்கிரமசிங்க, பண்டாரநாயக்கா, ராஜபக்ஷ என மூன்று அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்துள்ளன. ஒவ்வொரு தடவையும் அரசாங்கம் கூண்டில் அடைக்கப்பட்ட அமைதிப் புறாவினை ஒரு கூண்டுக்குள் இருந்து மற்றொன்றுக்கு [illegible] சுதந்திரமாகப் பறந்துசெல்ல அதனை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. கூண்டில் அடைக்கப்பட்டு பலமுறை குத்தப்பட்ட அமைதிப் புறா தற்போது தன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது.

## ரணில் அரசு காலத்தினை இழுத்தடித்து வந்தது

விக்கிரமசிங்கவுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டபின்னர் அவரது அரசாங்கத்துடன் ஆறு மாதங்களாக நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். முன்னைய சிங்கள அரசுகள் அனைத்தையும் போலவே, விக்கிரமசிங்க அரசாங்கமும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களையும், பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்படிக்கைகளையும் நடைமுறைப்படுத்தாமல் நேரத்தினை இழுத்தடித்து வந்தது. மக்களது வாழ்விடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறுவதற்கு அதன் இராணுவம் மறுத்தது, அப்பெரிய நிலப்பரப்புக்களை இராணுவப் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து, எமது மக்களிடம் அவர்களது நிலத்தினைத் திருப்பிக் கொடுப்பதற்கு நிரந்தரமாக மறுத்தது. போர் நெருக்கடியினைக் குறைத்து, இயல்பு நிலையினைக் கொண்டு வருவதற்காக ஏற்படுத்தப்பட்ட உபகுழுவும் செயலிழந்து போனது. மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட உபகுழுவும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளால் பலமிழந்து போனது.

எமது மக்களது மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மறுத்த விக்கிரசிங்க அரசாங்கம் எமது அமைப்பினை உலகின் அரங்கில் ஓரங்கட்டுவதற்கு இரகசியமான முறையில் செயற்பட்டது. தமிழர் தாயத்தில் முறையான நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு முன்னரே தென்னிலங்கையில் செலவுசெய்வதற்கான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கென நன்கொடையாளர் மாநாடுகளை அது நடாத்தியது. வாஷிங்ரனில் நடத்தப்பட்ட நன்கொடையாளர் மாநாட்டில் நாம் பங்குபற்றுவதற்கான வழிவகைகளைச் செய்யத் தவறிய விக்கிரமசிங்க அரசாங்கம் எமது அமைப்பை ஓரங்கட்டி, அவமானப்படுத்தியது. இதன்காரணமாக ரோக்கியோ மாநாட்டினைத் தவிர்ப்பதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். விக்கிரமசிங்க அரசாங்கம் இத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. சர்வதேச பாதுகாப்பு வலைக்குள் எமது விடுதலை அமைப்பினைச் சிக்கவைத்து, எங்களை அழிப்பதற்கு அது சதி செய்தது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபை நாம் முன்வைத்தபோது, தென்னிலங்கை அரசியலில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்தன. குமாரதுங்க அரசாங்கம் கடிவாளத்தினை எடுத்துக்கொண்டது. எங்களது வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு மறுத்த அதேவேளையில், அவரது அரசாங்கம் துணை இராணுவக் குழுக்களைப் பயன்படுத்தி எம்மீது நிழல் யுத்தத்தினைத் தீவிரப்படுத்தியது. இந்தத் துணை இராணுவக் குழுக்களால் தமிழர் தாயகம் வன்முறைக் குருதிக் களமாக மாறியது. கல்விமான்கள், அரசியல்த் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு அமைவாக, சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களில் எமது போராளிகள் மேற்கொண்டு வந்த அரசியற் பணிகளை நிறுத்த வேண்டிய நிலைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதன்காரணமாக எமது மக்கள் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடூரப் பிடியில் தனித்து விடப்பட்டார்கள். இறுதியில் சுனாமி புனர்வாழ்விற்கென அது கையொப்பமிட்ட பொதுக்கட்டமைப்பினைக்கூட சந்திரிக்கா அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. உச்ச நீதிமன்றம் ஒற்றையாட்சி அரசியலமைப்பினைக் காரணங்காட்டி, முற்றிலும் மனிதாபிமானம் நோக்கங்கொண்ட இந்த உடன்படிக்கையினை நிராகரித்தது.

## ராஜபக்ஷவுக்கும் இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை

இந்த நேரத்தில்தான் சிங்கள தேசம் தங்களது புதிய ஜனாதிபதியாக ராஜபக்ஷவைத் தேர்ந்தெடுத்தது. கடந்த காலச் சிங்களத் தலைவர்களைப் போலவே இவரும் இராணுவ வழித் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளார். தமிழ் மக்களது தேசியப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு கடந்த மாவீரர் தின அறிக்கையில் நாம் விடுத்திருந்த இறுதி வேண்டுகோளை அவர் நிராகரித்தார். மாறாக, எமது இயக்கத்தினை அழிக்கும் நோக்கோடு ஒரு வளத்தில் போரை முடுக்கி விட்டிருக்கும் அவர், மறுவளத்தில் அமைதிவழித் தீர்வினைக் காண்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார். போரும் சமாதானமும் என்ற இந்த அணுகுமுறை அடிப்படை[illegible]. எந்த அமைப்புடன் பேசித் தீர்வு காணவேண்டுமோ அந்த விடுதலை அமைப்பினை ஓரங்கட்டி அழித்துவிட்டு தீர்வினைக் காண்பது என்பது சாத்தியமற்றது. இது சிங்களத் தலைவர்களின் முட்டாள் தனமேயாகும்.

தனது படைபலத்தினைப் பயன்படுத்தி தமிழ்த் தேசத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கலாம் என ராஜபக்ச அரசு எண்ணுகின்றது. தமிழர் தாயகத்தினை ஆக்கிரமித்து, அரைகுறைத் தீர்வை தமிழர்மீது திணிப்பதற்கு அது விரும்புகின்றது. ராஜபக்ச அரசின் இந்தத் தந்திரோபாயத்தினால்தான், யுத்தநிறுத்த ஒப்பந்தம் செயலிழந்துபோய்க் கிடக்கின்றது. எமது நிலைகள் மீது தாக்குதல்களை நடாத்துவோம் என வெளிப்படையாகவே அறிவித்துவிட்டு, நடாத்திவரும் ராஜபக்ஷ அரசு இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குரிய ஈமக்கிரிகைகளை செம்மையாகச் செய்திருக்கின்றது.

ராஜபக்ஷ அரசின் தாக்குதல்கள் தரை, கடல், வான்தாக்குதல்கள் வரை விரிவடைந்துள்ளன. ராஜபக்ஷ அரசாங்கம் துணை இராணுவக் குழுக்களுக்கு அவை விரும்பியவாறு யாரையும் கொல்வதற்குரிய சுதந்திரத்தினை வழங்கியிருக்கின்றது. தூரநோக்குடன் மாவிலாறில் இருந்தும் சம்பூரில் இருந்தும் நாம் மேற்கொண்ட தந்திரோபாயப் பின்வாங்கல்களை சிங்கள இராணுவம் தவறாக மதிப்பிட்டது. தமிழர் நிலப்பரப்புக்களை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு பெருமளவு ஆயுத பலத்தினைப் பயன்படுத்தி பாரிய வலிந்த தாக்குதல்களை ஆரம்பித்தது. இதனால் தமிழர் நிலம் இரத்தபூமியாக மாறியது.

இந்நிலையில்தான் சிங்கள அரசிற்கு நாம் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதற்குத் தீர்மானித்தோம். கிளாலி மற்றும் முகமாலையூடாக முன்னேற முயன்ற சிங்களப் படைகள்மீது எமது படைகள் மின்னல் வேகத்தாக்குதல்களை நடத்தின. கடுமையான இழப்புக்களைச் சந்தித்த எதிரி, தனது படை நடவடிக்கையினைத் தற்காலிகமாகக் கைவிட வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இருப்பினும், தனது இராணுவத் திட்டங்களை சிங்கள அரசு கைவிடவில்லை. தனது இராணுவ வழியினையே அது தொடர்ந்தும் பின்பற்றுகின்றது.

## ஐரோப்பிய ஒன்றியத்தினதும் கனடாவினதும் நடவடிக்கை

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ்மக்களை இன அழிப்புச் செய்துவருகின்ற அதே வேளையில், இந்த இன அழிப்பிலிருந்து தமிழர்களைப் பாதுகாப்பதற்காக போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்ற எமது இயக்கத்தினைப் பயங்கரவாத அமைப்பாகச் சித்தரித்து வருகின்றது. எமது இயக்கத்தின் மீது அவப்பெயரினை ஏற்படுத்துவதற்கான மோசமான பிரச்சாரத்தினை அது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. எமது மக்களது ஏகோபித்த எதிர்ப்பினையும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆட்சேபனையினையும் உதாசீனப்படுத்தி விட்டு, ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும் சிறிலங்கா அரசாங்கத்தின் இராஜதந்திர அழுத்தங்களுக்குச் இசைந்து எமது அமைப்பினைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டன. எங்களை விரும்பத்தகாததோராகவும், வேண்டத்தகாதோராகவும் அவர்கள் ஒதுக்கி ஓரங்கட்டினர்.

நீதி, நியாயங்களைப் பற்றிச் சிந்திக்காது அவசரப்பட்டு எடுத்த இந்த முடிவு பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சிங்கள அரசுடன் எமக்கிருந்த சம பங்காளி மற்றும் படைவலுச் சமநிலையினை இது கடுமையாகப் பாதித்தது. சிங்கள அரசு கடும்போக்கினைக் கடைப்பிடிக்க இது ஊக்கப்படுத்தியது. இது இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினைப் பலவீனப்படுத்தியதுடன், சிங்கள அரசின் போர்த் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கியது. சமாதான முயற்சிகளுக்கு உதவுவதாகக் கூறிக்கொள்ளும் சில நாடுகள், சிங்கள அரசு மேற்கொண்டு வரும் இனஅழிப்புத் தாக்குதல்களைக் கண்டிக்கத் தவறியது மட்டுமன்றி, சிங்கள அரசின் போர்த் திட்டங்களுக்கு ஆதரவாக இராணுவ மற்றும் நிதியுதவிகளையும் செய்துவருகின்றது. இந்த புறநிலைகள்தான் ராஜபக்ச அரசாங்கம் தமிழர் நிலங்கள் மீது முழுத் திமிருடன் தனது கொடூரமான படை நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்வதற்கான ஊக்கத் தினைக் கொடுக்கின்றன.

தனது இராணுவப் போக்கில் நம்பிக்கை கொண்டிருப்பதன் காரணமாக ராஜபக்ஷ அரசு சமாதானப் பேச்சுக்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சமாதான முயற்சிகளில் அதற்குள்ள அக்கறையின்மை காரணமாக இரண்டு ஜெனீவாப் பேச்சுக்களும் ஆக்கபூர்வமானதாக அமையவில்லை. முதலாம் கட்டப் பேச்சுக்களில் இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதை ஆதாரங்களோடும் புள்ளி

(05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் மறவா இருவிழி பனிக்கும் ஏழாண்டு நினைவஞ்சலி



### திருமதி சுந்தரலிங்கம் தேவராணி

இருவிழி நீர் பனிப்ப இதயம் சோகக்கடலில் அமிழ்ந்து அல்லலுற, நீங்கா நினைவின் நேரிழை மறைந்த ஏழாம் ஆண்டில் மறத்தற்கரிய மறந்தறியா மங்கை நல்லாளின் இல்லக விளக்கொளி நினைவில் நிறைந்து நெஞ்சை நிறைத்து கனக்க வைக்கின்றது. பத்துப் பத்துத் திங்கள் சுமந்து தந்த செல்வங்கள் படர்விழி பனிப்ப நடந்த சாலையும் இருந்த அகமும் நீளநின் நினைவை மீட்டுநிற்க வட்டுவினி வைரவர், பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்தன், இணுவையம்பதி சிவகாமசுந்தரி எம் துயர் களைய நின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

இரா.சுந்தரலிங்கம்,
*(முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்),*
மகன்,மகள், மருமக்கள், பேரன்.

*'செல்வானந்தவாசா'*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



### இளையதம்பி கிருபாகரன்

தோற்றம் 31.12.1974 — மறைவு 19.10.2006

*நாட்கள் பல கழிந்தாலும்*
*ஆறவில்லை எம் துயரம்*
*மீண்டும் வா எங்களிடம்*
*கூடி நாம் உறவாட.*

கடந்த 19.10.2006 அன்று அகால மரணமடைந்த இளையதம்பி கிருபாகரன் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத் தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இராசவீதி, தோப்பு,*
*அச்சுவேலி.*

**உன் பிரிவால் வாடும்**
**குடும்பத்தினர்.**

## கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்* 07 . 08 . 1932



*ஆண்டவன் அடியில்* 08 . 12 . 2005

### திருமதி இராசரத்தினம் பாக்கியம்

திதி: பூர்வபஷ அட்டமி (28.11.2006 செவ்வாய்க்கிழமை)

*அம்மா எங்களின் அன்புத் தெய்வமே!*
*நீங்கள் உங்களையே அர்ப்பணித்து வளர்த்து*
*எங்களைத் தலை நிமிர்ந்து வாழ வைத்தீர்களம்மா!*
*உடலால் பிரிந்து ஒரு வருடம் கடந்தாலும்*
*எங்கள் இதயத்தில் உங்களை நாம்*
*என்றுமே அழியாமல் காக்கின்றோம்*
*நீங்கள் இறைவனோடு இருக்கின்றீர்கள்*
*என்று நாம் உணர்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

நி.வதிவிடம்:
'மலர் வாசம்'
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.

(55573)

த.வதிவிடம்:
*இல.43 ஏ, சிவப்பிரகாசம் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 30 . 05 . 1964



*மறைவு* 28 . 11 . 2005

### இராஜேந்திரம் குயின்ரன்

*எம்மை விட்டு நீர் மறைந்து*
*ஓர் ஆண்டு ஆனாலும் உம் நினைவு*
*என்றும் எம்மை விட்டு மறையாது*

15/1, இராஜேந்திரா வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(55528)

தகவல்:
**இராஜேந்திரம்** (வேவி - தந்தை)

## வேலை ஆள்கள் தேவை

1) கொம்பியூட்டர் லிகிதர் (ஆண், பெண்)
2) இரவு காவலாளி (ஆண்)

சம்பளம் நேரில் பேசப்படும்

தொடர்பு கொள்ளும் முகவரி:
**ஞானம் விவசாய தோட்டம்,**
கொற்றாவத்தை.

(சி.50478)

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்** தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: **0112721789, 0114964994, 0785788811, 0785325501.**

(சி/50463)

## 45ஆம்நாள் நினைவஞ்சலி



### அமரர் இளையதம்பி கிருபாகரன்

(செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் - சீனியர் லேன், கலட்டி)

கடந்த 19.10.2006 அன்று இறைபதம் அடைந்த அமரர் இளையதம்பி கிருபாகரன் அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள்,
செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்.

16/2, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 20.08.1923 — ஆண்டவன் அடியில் 23.11.2001

### அமரர் முத்தையா சதானந்தன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி)

ஆண்டுகள் ஐந்து அகன்றாலும்
உன் அன்புமுகம் மறையவில்லை
பாண்டுறங்கன் புகழ்பாடும்
இனிய குரல் கேட்குதையா

தங்கள் நினைவோடு வாழும்
மனைவி செல்வம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(55589)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

(நீதிமன்ற கட்டளை சேவகர்)

மாதகல் மண்ணின் மைந்தனாய் பிறந்து
மாண்புடன் வையத்துள் அனைவருள்ளும் வாழ்ந்து
வானகத்தின் வாழ்வை தேடிச் சென்ற மணியை
வாழ்நாளில் எம்முயிர் உள்ளவரை உம்மை
[illegible]

[illegible] நீதிமன்ற
யாழ்ப்பாணம். (55831) நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



கமலா வைத்தியசாலை, கொக்குவில் பொறுப்பதிகாரி டாக்டர் க. ஸ்ரீதரனின்தந்தையும், டாக்டர் அன்புச் செல்வி ஸ்ரீதரனின் (சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை) அவர்களின் அன்பு மாமனும் கமலா வைத்தியசாலை ஸ்தாபகருமான அமரர் டாக்டர் **சின்னத்தம்பி கனேஸ்** (ஜே.பி) அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**டாக்டர் த.சத்தியசீலன் குடும்பம்,**
**சண்டிலிப்பாய்.**

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி சாரதாதேவி இராசரத்தினம்*

**(சாராள் - நாச்சிமார் கோயிலடி, மதவடி)**



யாழ்ப்பாணம், 1035, கே.கே.எஸ் வீதியைச் சேர்ந்த திருமதி சாரதாதேவி இராசரத்தினம் (27.11.2006) அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் இராஜகோபால், சந்திராதேவி, இரத்தினகோபால், ஞானகோபால், சறோஜாதேவி, ஸ்ரீகோபால், ராகினிதேவி, சந்தானகோபால் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற து.அம்பலவாணர் மற்றும் இ.லதா, இ.ஜெயலட்சுமி, ஞா.சுகன்யா, இ.சிவமூர்த்தி, ஸ்ரீ. செல்வமலர், சி.யோகரத்தினம், ச.சந்திரகலா ஆகியோரின் அன்பு மாமியாரும் இ.கார்த்திக், இ.திவ்யா, இ.சஞ்சை, அ.செந்தூரன், இ.அபிராமி, சத்தியப்பிரியா - பாலச்சந்திரன், இ.கலைவாணி, இ.கோபிராம், ஞா.கஜரூபா, ஞா.பஜனிதா, சி.தசாயினி, சி.மதீசன், சி.மஞ்சுதன், சி.கீதாயினி, ஸ்ரீநிவேதன், யோ.யோகரஞ்சித், யோ.யோகபிரசாத்-பிரவீனா, யோ.யோகசங்கீத், அனந்தவர்சினி - பகீ ரதன், ச.தனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(55634)

### *சின்னத்தம்பி கந்தையா (பாய்க்கடை)*



உடுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கற்பகப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் 18 வருடகாலமாகப் பிரான்ஸில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி கந்தையா நேற்று (27.11.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னதம்பி பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (கனடா), குலேந்திரன் (பிரான்ஸ்), ரஞ்சினிதேவி (பிரான்ஸ்), வரேந்திரன் (கனடா), ரஜினிதேவி (பிரான்ஸ்), ரமணிதேவி (லண்டன்), விமலேந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணி (கனடா), நிலோஜனா (பிரான்ஸ்), கனகராஜா (பிரான்ஸ்), சசிரேகா (கனடா), காந்தன் (பிரான்ஸ்), ஞானேஸ்வரன் (லண்டன்), விநோதினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரியா, கேமா, தர்மா, நிரோதா, நிபுணன், அகிலன், அகிலா, அகில்யா, சஞ்சீவன், சிந்துஜா, வானுஜா, அர்ச்சனா, அபிநாந், அமரன், அனுசியா, தீனு, கஸ்தூரி, கௌதம், விதுஷன், ஆகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*பாலாவோடை, மானிப்பாய்.*
*தொ.பே.: 021 4591519*

தகவல்:
**த.இலங்கநாதன்**
(காந்தி - மருமகன்)

### *திருமதி கனகாம்பிகை சிறீஸ்கந்தசெல்வன்*



இல.59, செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்தவரும் தற்போது 158 (114), நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கனகாம்பிகை சிறீஸ்கந்தசெல்வன் (ஓய்வூதியர்- யாழ் செயலகம்) 26.11.2006 காலமானார்.

அன்னார் சிறீஸ்கந்தசெல்வன் (அமைப்பாளர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்களின் பாசமிகு மனைவியும் கச்சேரியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை (ஓய்வூதியர் - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் கோப்பாய் தெற்கு பகவான் பாதையைச் சேர்ந்த காலஞ்சென்ற கெல்லதுரை (ஓய்வூதியர்), பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மருமகளும் துஷாந்தி (LLB and Attorney- at Law), கஜேந்தி (Opean University Natural Science - Final Year), ஆரணி (O\L மாணவி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் தாயும் மயில்வாகனம், மகேஸ்வரி, சரஸ்வதி (கனடா), ஆகியோரின் சகோதரியும் அரியரட்ணம் - குமாரசெல்வி காலஞ்சென்ற சந்திரகுமாரி, சுரேந்திரகுமார் - உருத்திரகுமாரி, விக்னகுமார் - சகுந்தலா (லண்டன்), கௌரிகுமார் பாலராணி (கனடா), விஸ்ணுகுமார் - சுகந்தி (கனடா), சுதாகரன்-பாஸ்கரகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*158 (111), நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**செ.சிறீஸ்கந்தசெல்வன்**
*(கணவர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி கிருபாகரன்**
(நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்க அங்கத்தவர்)


கடந்த 2006.10.19 இல் இறைவனடி சேர்ந்த இளையதம்பி கிருபாகரன் அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தவர்களுக்கும், சக நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கம்.*
*கைதடி.*

(55625)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17 . 03 . 1932



உதிர்வு
19 . 11 . 2004

**வல்லிபுரம் கிருஷ்ணசாமி**
(உரிமையாளர், விநாயகா மோட்டார் வேக்ஸ் - மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி)

*திதி: பூர்வ பட்ச அட்டமி 28.11.2006 செவ்வாய்க்கிழமை*

அன்பால் ஈர்த்து ஆறுதல் தான் தந்து
வேண்டும் வகையெல்லாம் விழைந்து ஈந்தீரே!
கண்மூடி விழிக்கும் முன்னே காலனிடம் போயும் நீர்
ஆண்டுகள் இரண்டாச்சே எம் அரிய அப்பாவே!

தற்காலிக முகவரி:
'கோகுலம்', காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (55555)
- **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### Dr.சின்னத்தம்பி கணேஸ்

(ஸ்தாபகர், கமலா வைத்தியசாலை, புங்குடுதீவு, சமாதான நீதவான்)



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கணேஸ் அவர்கள் 25.11.2006 இல் காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சந்திராகௌரி (இலிகிதர், காணிப்பதிவகம், திருகோணமலை), முரளிதரன் (ஆசிரியர்-திருகோணமலை), கெங்காதரன் (ஜேர்மனி), Dr.ஸ்ரீதரன் (கமலா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), வித்தியாதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார் (பொறியியலாளர் - கட்டார்), செல்வநந்தினி (ஆசிரியை - திருகோணமலை), அமுதா (ஜேர்மனி), அன்புச்செல்வி (சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்), சசிகலா (கனடா) அகியோரின் மாமனும் திருமதி நாகம்மா காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும் சபிதா (கலைப் பீடம் 2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஹரிபிரசாத், அருண்பிரசாத், சுவேதிகா, சுதன், ஹர்சனா, ஜினோத், விதுசா, விதுன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.11.2006 செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் புங்குடுதீவு மணல்காடு மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

**தகவல்:**
Dr.க.ஸ்ரீதரன் (மகன்).

(55609)

### வயிரமுத்து வீரசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து வீரசிங்கம் 25.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து - கண்ணகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் மனோன்மணி, யோகேஸ்வரி (லண்டன்), அற்புதசிங்கம் (லண்டன்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயா, வீனஸ், வினோலியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயபாலசிங்கம் (மணிக்கடை), சுப்பிரமணியம், உதயசேகர் ஆகியோரின் அன்பு மாமனும் ஜெஸ்மியா (ஆஷா), ஜெவித்தா (அமித்தா), ஜெசிக்கா (அனிற்றா), ஜெரிக் கண்ணன், மைதிலி, மயூரராஜ், மயூரரூபி, மயூரவேணி, கபில்ராஜ், நிவேதிகா, டிலக்ஜன், துவாரகா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரேசன் றோட்,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
குடும்பத்தினர்.


**விஜி ஹெய்கூல் என்ஜினியர்ஸ்**

சகல விதமான குளிர்சாதனங்களையும் (Refrigerator, A/C) வீட்டிலே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகட்கு - **க.விஜிட்**
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.


## தவறிவிட்டது

யேம்ஸ் கமிலஸ் ரெட்ணகுமார் என்பவருடைய கடவுச்சீட்டு (இல M 1949767), Police Report என்பன கொட்டடிச் சந்தைக்கும் யாழ்.பஸ்நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.6/4, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது தொ.பே: 021 4590919 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


**D.V 2008 விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு**

டிசெம்பர் 3 ஆம் திகதிவரை மட்டும்



55000 பேர் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்காதோர் பாஸ்போட் அளவு கலர் புகைப்படத்துடன் உடன் தொடர்புகொள்ளவும். விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்துக்கான உறுதிப் பற்றுச்சீட்டினையும் உடன் பெற்றுக்கெள்ளலாம்.

விண்ணப்பக்கட்டணம் 200ருபா மட்டுமே

**திருமுருகன் கொம் நெற்**
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 7855
46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே.: 222 7310


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
11 . 06 . 1939



மறைவு
29 . 10 . 2006

அமரர்
**சுப்பிரமணியம் சின்னையா**

கைதடி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எம் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து பல வகைகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் யாவருக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெஞ்சம் நெகிழ்ந்துருகும்,
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உறவுகள்.**

கைதடி மத்தி, கைதடி

(55493)

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் இன்றைய (28.11.2006) செவ்வாய்க்கிழமை பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் கல்வியில் முதுமாணிப் பட்டம் பெறும் எமது நண்பரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான

**கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்**
B.Sc. (Hons) Agri, M.Sc.(Sc Ed).MA (Teach. Ed), PGDE
(செந்தில் - அச்சுவேலியைச் சேர்ந்தவர்)

*அவர்கள் பல்கலையும் பெற்று சீரோடும் சிறப்போடும் நீடுழி வாழ ஆண்டவனைப் பிரார்த்தித்து உளமாரப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.*

(55588) **பல்கலைக்கழக நண்பர்கள்.**

## 45ஆம் நாள் நினைவலைகள்

அன்னையின் மடியில்
30 . 08 . 1948



ஆண்டவன் அடியில்
15 . 10 . 2006

**சரவணமுத்து பஞ்சவர்ணன்**
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

நிஜங்கள் எல்லாம்
நிழலாகிப் போனதோ - அப்பா!
நினைவுகள் எல்லாம்
கனவுகள் தானோ அப்பா!
காத தூரம் நீங்கள் போனாலும்
காதில் உங்கள் குரல் ஒலிக்குதப்பா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!.ஓம் சாந்தி!!!

தம்பசிட்டி, பருத்தித்துறை. (55560) **குடும்பத்தினர்.**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

ஜனனம்
07 * 09 * 1973



மரணம்
17 * 10 * 2006

**கனகசிங்கம் பாஸ்கரன்**

*எமது செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.11.20006) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு 30.11.2006 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள்அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பெற்றவளுடன் அன்பு மனைவியும்
உற்றவருடன் உடன் பிறந்தோரும்
என்றும் உன் நினைவுடன்.

16, சங்கிலியன் வீதி,
நல்லூர். (55526) **குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்**
(நீதிமன்ற கட்டளைச் சேவகர், மேல்வட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.)

26.06.1948 29.10.2006

எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறுஅன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கிடைக்காதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

221, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழர் தாயகத்தை ஒதுக்கிவிட்டு சுபீட்சம் காணும் தெற்கின் கனவு

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தென்னிலங்கை அரசுத் தலைமையைப் பார்த்து நியாயமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார்.

''எமது தமிழர் தாயக மக்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களைப் பிரிந்து, உயிர் உறவுகளை இழந்து, தங்கள் சொந்த வீடு வாசல்களைத் துறந்து, பசி, பட்டினி அவலங்களுடன் தற்காலிக குடிசைகளிலும் மரங்களின் கீழும் மாரி மழையிலும் கடும் காற்றிலும் சிக்குண்டு, போஷாக்கின்றி அல்லற்படுகின்றனர். அவர்களின் இருப்பே - அடுத்த நிமிட வாழ்வே - கேள்விக்குறியாகி அவர்கள் அந்தரப்படும்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து நீங்கள் அதிகம் பீற்றிக் கொள்கின்றீர்கள். 'பாமர மக்களுக்கான - பத்து வருடத் தூர நோக்குடைய - மஹிந்த சிந்தனையை உள்ளடக்கிய வரவு - செலவுத்திட்டம்' என்றெல்லம் புகழாரம் சூட்டி பிரபலாபித்துக்கொள்கின்றீர்கள்.

''தமிழர் தாயகத்தைப் புறக்கணித்து அதனை அடிமைத்தனத்திலும், துயரத்திலும், வேதனையிலும் ஆழ்த்திக் கொண்டு, தென்னிலங்கையை பொருளாதார சுபீட்சத்தை நோக்கி வழி நடத்தலாம் என்று நீங்கள் எண்ணுவீர்களாயின் அது வெறும் பகற்கனவேயன்றி வேறில்லை'' - என்று இடித்துரைத்திருக்கின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

'ஒரு க்ண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு' என்பதுபோல, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், ஏனைய பொருண்மிய வசதிகள் போன்றவற்றில் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தை அந்நியப் பிரதேசமாகவும் தென்னிலங்கையை சுதேசியத் தாயகமர்கவும் கருதிக் கையாள்கிறது தென்னிலங்கை அரசு.

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தின் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி, மாவட்ட ரீதியில் செலவிடப்படும் அடிப்படையை மேலோட்டமாக நோக்கினாலேயே இந்தப் பாரபட்சம் அப்பட்டமாகப் புலப்படும்.

சிறுபான்மையினரை ஒதுக்கும் - அடக்கி ஒடுக்கும் - கொள்கைப் போக்கையே பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து விடுபட்ட காலம் முதல், தென்னிலங்கை சிங்கள - பௌத்த மேலாதிக்க அரசுகள் கடைப்பிடித்து வருகின்றன.

அதன் விளைவே இனமோதல்களும் குரோதமும் இவ்வளவு தூரம் மோசமடைந்து விபரீத நிலையை எட்டியமையாகும்.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல் - ஒடுக்குமுறைக் கொள்கையை மேலும் தீவிரமாகக் கடைப்பிடித்து நிலைவரத்தை மென்மேலும் மோசமடையச் செய்வதற்கு தென்னிலங்கை முயற்சிக்கின்றது போலும்.

பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்துத் துறைகளுக்கு பெருமளவு நிதியை ஒதுக்கி அதன் மூலம் யுத்த முன்னெடுப்பு வரவு - செலவுத் திட்டத்தை மஹிந்தரின் அரசு முன்மொழிந்திருக்கின்றது.

தென்னிலங்கையின் அனைத்து சிங்களக் கட்சிகளும் தமக்கிடையிலான அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தமிழர்களுக்கு எதிரான இந்த யுத்தப் பிரகடன - வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டுமொத்தமாக ஆதரித்திருக்கின்றன.

பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை 45 சதவீதம் அதிகரித்து அதன் மூலம் யுத்தப் பிரகடனத்துக்கு முன்னறிவித்தல் விடுத்திருக்கின்றது மஹிந்தரின் அரசு. ஒட்டு மொத்த சிங்களமும் தமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை ஒதுக்கித் தள்ளிவைத்துவிட்டு - அந்த வரவு - செலவுத் திட்டத்தை ஒன்றுபட்டு ஆதரித்ததன் மூலம் தமிழர் விரோத நடவடிக்கையில் தனது ஐக்கியத்தை நிரூபித்திருக்கின்றது.

இந்த நடவடிக்கை மூலம் -

ஆயுத பலத்தால் - பலாத்காரத்தால் - தமிழர்களை அடக்கிக்கொண்டு அவர்கள் மீது தனது ஒடுக்குமுறை ஆட்சியைத் தொடர்ந்து திணிக்கலாம் என்ற கனவுலகில் இருந்து தென்னிலங்கை இன்னும் மீளவேயில்லை என்பதையும் அது நிரூபித்திருக்கின்றது.

ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. தமது தாயகத்தில் தமக்கென ஒரு சுயாட்சியை - நிர்வாகக் கட்டமைப்பை - ஆட்சி முறையை - நிலைநிறுத்திப் பேணக்கூடிய வலுவான - பலமான நிலைக்கு தமிழர் தாயகம் தன்னை உயர்திக்கொண்டுவிட்டது.

இந்த அடிப்படை யதார்த்தம் புரியாமல் அரசியல் - காய் நகர்த்தல்களைச் செய்ய முயல்கிறது தென்னிலங்கை.

ஆட்சி அதிகாரங்களைத் தமிழர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வு ஒன்றைக் காண முடியும். அத்தகைய தீர்வு எட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் அதை அத்திவாரமாகக் கொண்டு அதன் அடிப்படையில் பொருளாதார மீட்சியை - சுபீட்சத்தை - நோக்கி முழு நாட்டையும் முன்னேற்ற முடியும்.

அதைச் செய்யாமல் பொருளாதார சுபீட்சம் குறித்து தென்னிலங்கை கனவு காண்பது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதை' போன்றதுதான்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அதை அரசுக்கு இடித்துரைத்து விளக்கியிருக்கின்றார். ஆனால் அது தென்னிலங்கைக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை. பேரினவாதமும் பௌத்த - சிங்கள மேலாதிக்க வெறியும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவிடாமல் தென்னிலங்கையின் கண்களை மமதையாக மறைத்து நிற்கின்றன.

கையைச் சுட்டுக்கொள்ளும் பட்டறிவு மூலம்தான் இந்த மறைப்பு மறைந்து உண்மை புரியும் நிலை தென்னிலங்கைக்கு ஏற்படும் போலும்.

# கருணாநிதி மகள் தலைமையில் ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டம்

## வைரமுத்து தொடக்க உரை, நடிகர் சத்தியராஜ் வந்து வாழ்த்து

சென்னை, நவ.28

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்துத் தமிழ் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் முன்பு நேற்று உண்ணா விரதம் நடந்தது. முதலமைச்சர் கருணாநிதியின் மகளும், கவிஞருமான கனி மொழி தலைமை வகித்தார். கவிஞர் வைரமுத்து உண்ணாவிரதத்தைத் தொடக்கி வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ரவிக்குமார் எம்.எல்.ஏ., கவிஞர் அறிவுமதி, ஞானக்கூத்தன், தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராமநாராயணன், விஜயா தாயன்பன், முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி, நடிகை ஸ்ரீபிரியா, சேப்பாக்கம் வி.சி.மணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நடிகர் சத்தியராஜ் போராட்டத்திற்கு நேரில் வந்து வாழ்த்துத் தெரிவித்தார். மாலையில் திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் வெளியிடப்பட்ட கோரிக்கை வரு மாறு:-

- யாழ்ப்பாண நெடுஞ்சாலையை உடனே திறக்க வேண்டும்.
- தமிழர்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்.
- இந்தியா வழங்கும் உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நேரடியாக வழங்கவேண்டும்.
- தமிழர்கள் மீதான தாக்குதலை உடனே நிறுத்த இலங்கை அதிகாரியிடம் பிரதமர் வலியுறுத்த வேண்டும்.
- இலங்கை அரசோடு எந்த இராணுவ ஒப்பந்தமும் செய்யக் கூடாது. (ஐ)

# வவுனியாவில் இயல்புநிலை பாதிப்பு மாவீரர்தின நிகழ்வுகள் ஏதுமில்லை

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று மாவீரர் தின நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு பொது மக்கள் அனுமதிக்கப்படாததன் காரணமாகவே மாவீரர் தின நிகழ்வு இடம்பெறவில்லை.

நேற்றுக் காலை முதல் வவுனியா நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டு இருந்தன. பாடசாலைகள், வங்கிகள், தனியார் அரச திணைக்களங்கள் அனைத்தும், மதியத்துக்குப்பின் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாததன் காரணமாக பாடசாலைகள் இடையில் இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்துக்களும் இடம்பெறாததன் காரணமாக மக்கள் அவதிப்பட்டார்கள். நகரப்பகுதியில் வழமைக்குமாறாக இராணுவத்தினரையோ பொலிஸாரையோ அதிகளவில் காணமுடியவில்லை.

இதேவேளை, வவுனியா நகரிலிருந்து 14 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஈச்சங்குளம மாவீரர் துயிலும் இல்லத்திற்கு பிற்பகல் பத்திரிகையாளர் குழு ஒன்று சென்று படம் பிடிக்க முற்பட்டபோதும் அவர்கள் படம் எடுப்பதற்கு அப்பகுதியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் அனுமதி வழங்கவில்லை.

துயிலும் இல்லத்தில் உள்ள சில சமாதிகள் உடைக்கப்பட்டு இருந்தன. இம்முறை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள், மாவீரர் தின நிகழ்வுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும் அதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடம் கோரி இருந்த போதும் எந்த ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படவில்லை. மாவீரர் துயிலும் இல்லம் பற்றைக் காடான நிலையில் வெறிச்சோடிக் காணப்பட்டது.

# பேரினவாதத்தின் போக்கு தனியரசு என்பதைத் தவிர வேறு தெரிவு எதனையும் எமக்கு விட்டுவைக்கவில்லை

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

விபரங்களோடும் சம்பவக் கோர் வைகளோடும் பேச்சுமேசையில் சமர்ப்பித்தோம். இச்சான்றுகளை மறுக்க முடியாத சிறிலங்கா அரசு ஒட்டுக் குழுக்களை தமிழர் தாயகத்தில் இருந்து அகற்றி யுத்த நிறுத்த சரத்தை அமுல் படுத்துவதற்கு ஒப்புக்கொண்டது. எவ்வாறெனினும் முதலாவது ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் ஒரேயொரு மாற்றம் மட்டுமே ஏற்பட்டது. அரச மற்றும் ஒட்டுப்படைப் பயங்கரவாதம் தமிழர் தாயகத்தில் மேலும் தீவிரமாக்கப்பட்டது.

### கோரிக்கைகளை அரசு நிராகரித்தது

இரண்டாவது ஜெனீவாப் பேச்சுக்களும் தோல்வியிலேயே முடிவடைந்தன. எமது மக்கள் எதிர்நோக்கிய மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு இப் பேச்சுக்களில் முன்னுரிமை கொடுத்த நாம் ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும் எனவும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தோம். மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு மேலாக தனது இராணுவ நலன்களை முன்னிலைப்படுத்திய சிறிலங்கா அரசாங்கம் இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிராகரித்தது.

இயற்கைப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இரங்க மறுத்த சிங்கள அரசாங்கம் தானே திட்டமிட்டு, ஏற்படுத்திய மனிதாபிமானப் பிரச்சினைக்கு ஒருபோதுமே தனது நிலையில் இருந்து மாறப்போவது கிடையாது. ஒரே நேரத்தில் போரும் செய்வோம் அமைதிப் பேச்சுக்களையும் நடத்துவோம் எனக் குதர்க்கம் பேசுவோர் பேச்சுக்குழுவில் இருக்கும்போது எப்படி அமைதிப் பேச்சுக்கள் முன்னகரும்? எப்படி நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்? எப்படிச் சமாதானம் வரும்?

தன்னை ஓர் அமைதிப் புறாவாகக் காட்டிக்கொள்வதற்காக ஜனாதிபதி ராஜபக்ஷ போலியான ஒரு அனைத்துக் கட்சி மாநாட்டினை அரங்கேற்றினார். எந்தவொரு பிரச்சினைக்கும் முகங்கொடுக்க முடியாமல், கவனம் திசை திரும்பும் வரை நேரத்தினை இழுத்தடிக்க விரும்பினால் விசாரணைக் குழுக்களையோ, பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களையோ அமைத்தல் அல்லது அனைத்துக் கட்சி மாநாடுகள் அல்லது வட்ட மேசை மாநாடு என்பவற்றைக் கூட்டுதல் என்பனவே சிங்களத் தலைவர்கள் காலங்காலமாக மேற்கொண்டு வரும் பெயர்போன அரசியற் பாரம்பரியமாகும். இதனைத் தான் தற்போது ராஜபக்ஷவும் செய்துகொண்டிருக்கின்றார். தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வினைக் காணுமாறு நாங்கள் விடுத்த அழைப்பினை நிராகரித்து, அனைத்துக் கட்சி மாநாடு என்ற போர்வைக்குள் அவர் பதுங்கிக்கொண்டுள்ளார். இருட்டறையொன்றுக்குள் கறுப்புப் பூனையினைத் தேடியலைவதைப் போல, கடந்த பத்து மாதங்களாக இந்த அனைத்துக் கட்சிக்குழு தமிழர் பிரச்சினையினைத் தேடிக்கொண்டிருக்கின்றது.

### சு.க. - ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்காலிக சந்தர்ப்பவாத நகர்வே

அனைத்துக் கட்சி மாநாடு தோற்றுப் போனதும், ஜனாதிபதி ராஜபக்ஷ இரண்டு பெரிய கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற தனது அடுத்த துருப்புச் சீட்டினைக் கையிலெடுத்திருக்கின்றார். தென்னிலங்கை மீது ஆட்சி செய்யும் பலத்தினைக் கொண்டிருக்கின்ற இந்த இருபெரும் கட்சிகளும் பேரினவாதக் கட்சிகளே. தமிழர்கள் மீது இனஅழிப்பினை மேற்கொள்வதில் ஒன்றையொன்று போட்டிபோட்டு முந்திக் கொள்ளும் சிங்கள பௌத்த பேரினவாதத்தினூடாக உருவாகியிருக்கும் கட்சிகளே இவை. அமைதிவழித் தீர்வினைக் காணுமாறு சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தங்களால், சரிந்து செல்லும் பொருளாதார நிலைமையினால், அரசியல் பங்காளியான மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்பினால் ஏற்படும் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக ராஜபக்ஷ அரசால் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக சந்தர்ப்பவாத நகர்வே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமாகும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேர்மையான நோக்கம் எதுவுமே கிடையாது. இந்த இரண்டு கட்சிகளும் தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வினை ஒருபோதுமே முன்வைக்கப்போவதில்லை. மேற்கூறிய விடயங்களுடன் நின்றுவிடாது, உலகினை ஏமாற்றுவதற்காக ராஜபக்ஷ அரசு அனைத்துக் கட்சி மாநாட்டினைச் சாகவிடாது நடாத்துவதில் தொடர்ந்தும் அக்கறையினைக் காட்டும்.

எனது அன்பான மக்களே,

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானத்திற்கான இந்த அமைதிப் பயணம் ஆரம்பமாகி நீண்டகாலம் ஆகிவிட்டது. இந்த அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் நாம் எம்மால் இயன்றதைச் செய்தோம். பொறுமையினைக் கடைப்பிடித்தோம். அமைதி வழித் தீர்வினைக் கொண்டுவரு வதற்காக எண்ணிலடங்கா சந்தர்ப்பங்களை வழங்கினோம். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது ஒரு தடவையும், மகிந்த ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது இன்னொரு தடவையுமாக இரண்டு தடவைகள் எமது விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்கான திட்டத்தினை ஒத்திவைத்து, சமாதான முயற்சி களுக்கு மேலும் சந்தர்ப்பங்களை வழங்கி னோம்.

### பயனற்ற பாதையில் நடக்க நாம் தயாராக இல்லை

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை ஒரு போதும் முன்வைக்கப்போவதில்லை என்பது இன்று வெட்டவெளிச்சமாகியுள்ளது.

எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் எத்தனை யுகங்கள் ஓடி மறைந்தாலும் சிங்கள தேசத்தில் மனமாற்றம் நிகழப்போவதில்லை என்பதும் தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதும் இன்று தெட்டத்தெளிவாகியுள்ளது.

எனவே, நடக்கமுயாத விடயத்தில் நம்பிக்கை வைத்து தொடர்ந்தும் அதே பழைய பாதையில் நடைபோட இனியும் நாம் தயாரில்லை.

எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவும் விரும்பவில்லை. சிங்கள பேரினவாதத்தின் கடுமையான போக்கு தனியரசு என்ற ஓரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்துவைத்திருக்கின்றது.

எனவே, இந்த விடுதலைப் பாதையில் சென்று சுதந்திரத் தமிழீழ தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கிறோம்.

எமது அரசியல் சுதந்திரத்துக்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று, அங்கீகரிக்குமாறு நீதியின்வழிநடக்கும் உலக நாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் அன்போடு வேண்டுகிறோம்.

தங்களது ஆதரவுக்குரலினை வழங்கி வரும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தலைவர்களுக்கும் எங்களது நன்றி களைத் தெரிவித்துக்கொள்ளும் நாங்கள், அவர்களது முயற்சிகளைத் தொடர்ந்தும் வழங்கி எமது விடுதலைப் போராட்டத்திற்கு உதவும்படியும் அவர்களைக் கேட்டுநிற்கின்றோம்.

இடம்பெயர்ந்து உலகம் பூராகவும் பரந்து வாழும் புலம்பெயர்வாழும் தமிழ் உறவுகள் எமது போராட்டத்திற்கு ஆற்றி வரும் பங்களிப்புக்களுக்கு எங்களது அன்பையும் நன்றிகளையும் நாம் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில், அவர்களது தொடர்ச்சியான பங்களிப்பினையும், ஆதரவினையும் தொடந்தும் வழங்கும்படி கேட்டுநிற்கின்றோம்.

- இவ்வாறு மாவீரர் தின உரையில் தெரிவித்தார்.

## நாளை

கார்த்திகை 13
புதன்கிழமை
29.11.2006
திதி : நவமி
பின்னிரவு : 06.49
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு : 10.46
சுபநேரம் : 04.43 - 06.13
ராகுகாலம் : 12.13 - 01.43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேச வரலாற்றுடன் சங்கமமாகி நிற்பவர்கள் எமது மாவீரர்கள்

கிளிநொச்சி, நவ.28

தேசத்தின் வரலாற்றுடன் மாவீரர்கள் சங்கமமாகி நிற்கிறார்கள் - என்று மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று ஆற்றிய உரையில்:-

இன்று மாவீரர் நாள். இந்நாளை எமது மாவீரர்களின் பெருநாளாக, எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் தேசிய நாளாக, எமது இனம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சிநாளாக நாம் கொண்டாடுகிறோம்.

இந்த உலகத்தை துறந்து, இளமையின் இனிமையான உணர்வுகளைத் துறந்து சாதாரண வாழ்வின் சகலவற்றையும் துறந்து, எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, எமது மக்களது உயர் வாழ்விற்காகத் தமது உன்னதமான உயிர்களை உவந்தளித்த உத்தமர்களுக்கு இன்று நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறோம்.

எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால்தான் இவர் கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறார்கள், உயர்ந்து நிற்கிறார்கள். எமது தேசத்தின் வரலாற்றுடன் சங்கமமாகி நிற்கிறார்கள்.



ஈகச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தும்போது....

மாவீரர்கள் தமிழன்னையின் கருவூலத்தில் நித்திய வாழ்வு வாழ்கிறார்கள். சத்தியத்தின் சாட்சியாக நின்று, மனவலிமையின் நெருப்பாக எரிந்து, எம்மைச் சுதந்திரப் பாதையில் வழிகாட்டி நெறிப்படுத்திச் செல்கிறார்கள்.

மனித நாகரீகம் தோன்றிய காலந்தொட்டே மனித குலம் விடுதலை வேண்டி வீறுடன் போராடி வருகின்றது. வீறு கொண்டெரியும் இந்தப் போராட்டங்களை அடக்கியொடுக்க ஆக்கிரமிப்பாளர்களும் அடக்குமுறையாளர்களும் காலங்காலமாகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறார்கள். முதலிற் பேர் அரக்கனை ஏவுவதும் அது முடியாது போக, போராடும் இனங்களின் விடுதலைப் பாதையைத் திசைதிருப்பி, அவர்கள் போகும் வழிகளெல்லாம் பொறிகள் வைத்து, சமாதானச் சதிவலைக்குள் சிக்க வைத்து, காலத்தால் மோசம் செய்து, சமாதான மாயைக்குள் தள்ளிவிட்டு, அமைதியாக அழித்தொழிப்பதுவும் வரலாற்றிலே நீண்ட நெடுங்காலமாக நடந்துவருகின்றன.

இந்த உத்தியை எமது சுதந்திர இயக்கத்திற்கு எதிராகவும் செயற்படுத்திவிடலாம் எனச் சிங்கள அரசு கனவுகாண்கிறது. ஆனால், இந்த ஐந்து ஆண்டுகால அமைதி முயற்சியில் இந்த அக்கினிப் பரீட்சையில் நாம் எரிந்து போய்விடவில்லை; அழிந்துபோய் விடவுமில்லை. மாறாக நாம் இந்த வேள்வித்தீயிற் புடம்போடப்பட்டு, புதிய புலிகளாகப் புதுப்பொலிவுடன் எழுந்து நிற்கிறோம்.

தமிழரின் பலமும் வளமும் ஒன்றுகுவிந்து, பலம் மிக்க வலுமிக்க ஒரு பராக்கிரமச் சக்தியாக எழுந்து நிற்கிறோம். இந்த இமாலயச் சக்தியின் ஊற்றுவாய்கள் எமது மாவீரர்கள் என்பதை இந்நாளில் நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன் -என்று தெரிவித்தார்.

## இருபாலையில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், நவ. 28

கடந்த இரண்டு தினங்களாகக் காணாமற் போயிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை இருபாலைப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்தவரான சங்கரப்பிள்ளை செந்தூரன் (வயது-23) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்ற பிறகு காணாமற் போயிருந்தார்.

நேற்றுக் காலை இவரின் சடலம் இருபாலை விளையாட்டரங்கு வீதியில் கிடந்தது. கோப்பாய்ப் பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ஐ-68-88-111-15-78)

## தாவடியில் நேற்று வெட்டுக்காயங்களுடன் இரு சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.28

தாவடி வடக்கில், இணுவில் பாலாவோடைப் பகுதியில் வெட்டுக் காயங்களுடன் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கொட்டடி, கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் இவர்களில் கழுத்து மற்றும் கைகள் வெட்டப்பட்டிருந்தன என்றும்-

இருவரது சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி. ச. இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். (1)

## நாவாந்துறையில் ஞாயிறு நள்ளிரவு இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ.28

நாவாந்துறையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சகோதரர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் அவர்களது சகோதரி படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் சகோதரர்களான மரியதாஸ் யூட் (வயது 32), மரியதாஸ் யூலியஸ் (வயது 29) ஆகியவர்களே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

சகோதரியான மரியதாஸ் ஜெஸ்மின் (வயது 30) படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நள்ளிரவு வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் மேற்கூறப்பட்டவர்களை கூப்பிட்டு சுட்டபோது சகோதரி தடுக்கச் சென்றவேளை அவர் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குடும்பத்தினர் அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து நாவாந்துறையில் வசித்து வருகின்றார்கள். சடலங்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (1-15-68-78-88-111)

## தங்கேஸ்வரி எம்.பிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் பற்றி விசாரணை ஆரம்பம்

### நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, நவ.28

மட்டு. மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. தங்கேஸ்வரி கதிர்காமநாதனுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார் என சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் கூடியது. வாய் மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின் பின்னர் சபாநாயகர் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

''கூட்டமைப்பு எம்.பி. தங்கேஸ்வரிக்குத் தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பாக ஆளும் கட்சி பிரதம கொரடா அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது குறித்து நான் உடனடியாகப் பொலிஸ் மா அதிபருடன்தொடர்பு கொண்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது தொடர்பாக விசாரணை நடத்தும்படி பணிப்புரை விடுத்தேன்.

இது குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர் என்று தெரிவித் தார். (ஐ)

## நாவலர் வீதியில் கிரனேட் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.28

நாவலர் வீதியில் - பிறவுண் வீதிச் சந்திக்குச்சமீபமாக - நேற்றுக்காலை கிரனேட் ஒன்று மீட்கப்பட்டது.

பின்னர் படையினர் அதை எடுத்துச் சென்றனர்.

அப்பாதை ஊடான போக்குவரத்து சில மணிநேரம் தடைசெய்யப்பட்டிருந்தது. (1)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பவானந்தம் இராசம்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவானந்தம் இராசம் நேற்று (27.11.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பவானந்தன் (கணவர்)
சசிகலா (மகள்)

### சீவரத்தினம் கந்தசாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சித்தன்கேணி)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்,) நேற்று (27.11.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்கு சித்தன்கேணியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சித்தன்கேணி. திருமதி கந்தசாமி ரத்தினேஸ்வரி.
(மனைவி)


## குடாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளும், தனியார் மினிபஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றன.

படையினரின் சோதனைகள்கள், வீதி ரோந்து என்பன வழமைபோன்று இடம்பெற்றன.

பொதுமக்களின் நடமாட்டம் இன்மையால் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. (ஐ-68)

## புலிகள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் காண்போம். அதுதான் அரசின் நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளின் தலைவர் திம்புவில் இருந்து ஜெனிவா வரையான அமைதிப் பேச்சுப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். திம்புவில் இருந்து ஜெனிவா வரையான காலப்பகுதியில்தான் உலகெங்குமுள்ள புத்தமதத்தினர் வழிபடும் தலதா மாளிகை தாக்குதலுக்குள்ளானது. அந்தக் காலகட்டத்தில்தான் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற தாக்குதலில் அப்பாவி முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

எனவே, அவரின் அனைத்துக் கருத்துக்களிலும் இந்த ஏமாற்றும் தன்மை நன்றாகவே வெளிப்படுகின்றது.

எமக்கு இதுகுறித்து ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள் குறிப்பாக வாகரையில் உள்ள தமிழ் மக்கள், பிரபாகரனின் பயங்கரவாதப் பிடியில் இருந்து தப்ப முனைவது அதிகரித்துள்ளது.

அந்தளவிற்கு தமிழ் மக்கள் அரசு தரவுள்ள அரசியல் தீர்வை எதிர்பார்த்திருப்பது தெரிகிறது.

-என்றார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல. (த-12)


## பஸ் வாடகைக்குத் தேவை

ஐம்பதுபேர் பயணம் செய்யக் கூடிய பஸ் வாடகைக்கு தேவை. உடன் நேரில் வரவும்.

**Expo Air**
1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று வீடு திரும்புகையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை-

பாலையூற்று தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் வைத்து உவர் மலையைச் சேர்ந்த மயூரன் (வயது-24) என்ற இளைஞரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைகள் தொடர்பாக திருகோணமலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், இது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## புலிகள் வன்முறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேசவுள்ளேன். அப்போது இலங்கை மற்றும் இந்தியா இடையே உள்ள கடல் பகுதியில் இருநாட்டு கடற்படையினரும் கூட்டாக ரோந்துப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன். இந்தக் கடல் பகுதி வழியாக ஆயுதங்கள் மட்டு மல்ல, போதைப் பொருளும் கடத்தப்பட்டு வருகிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள சர்வதேச படையைக் கேட்கும் எண்ணம் இல்லை. கருணா ஆதரவு படைக்காக சிறுவர்களை இலங்கை இராணுவத்தினர் தேர்வு செய்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு வெறும் 'ஜோக்' தான்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க ஒருகுழு அமைக்கப்பட்டுள்ளது. இதில், அனைத்துத் தரப்பு பிரதிநிதிகளும் இடம்பெற்றுள்ளனர். இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவது விடுதலைப் புலிகள்தான். தங்களது கொடுஞ்செயல்களை அவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொண்டதே இல்லை. தமிழ் மக்கள் சமுதாயத்தில் தங்களுக்கு அதிருப்தியே இருக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர்கள் அவர்கள். பலதரப்பட்ட கருத்துகள் இருப்பதுதான் ஜனநாயகம். ஆனால், இதை விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனது நிலையை இந்தியத் தலைவர்களிடம் எடுத்துக் கூறுவேன். இந்தியா எப்போதும் இலங்கையின் நெருங்கிய நண்பனாகவே இருந்து வருகிறது. நான் அதிபர் பதவியேற்றதில் இருந்து பேச்சுக்கு வரும்படி விடுதலைப் புலிகளுக்கு தினமும் அழைப்பு விடுத்து வருகிறேன். ஆனால், அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கி வருகின்றனர். அதை எதிர்கொள்வதைத் தவிர இலங்கை இராணுவத்துக்கு வேறுவழியில்லை. இவ்வாறு அதிபர் ராஜபக்ஷ கூறினார். (ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org